FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318703

1. District : மாவட்டம் Coimbatore. PS: காவல்நிலையம் VEAC, Coimbatore Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 19/2025/AC/CB. Date: நாள் 12.09.2025 at 1145hrs.

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act 1988 as amended by the Sections பிரிவுகள்: 7, 12 r/w 7.
(ii) Act சட்டம்: Prevention of corruption (Amendment) Act - 2018. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 11.09.2025 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1600 hrs Time to : நேரம் வரை 2000 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.09.2025 Time : நேரம் 1100hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.09.2025 Time : நேரம் 1100 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் written typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Singanallur Sub-Registrar office, Vellalore, Coimbatore. approximately 20 kms South East direction
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Babu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Srirangan.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Inspection Cell officer. (g) Address : முகவரி District collector office, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. R. Rajottaman age 49, Sub-Registrar, Singanallur Sub Registrar office
2. Tmt. R. Jacintha age 50, Joint Sub Registrar(i/c), Singanallur Sub Registrar office
3. Tr. S. Ravichandiran age 39, Data Entry operator (TCS) Singanallur Sub Registrar office.
4. Tr. S. Ramesh. age 37, s/o Selvaraj, B4 Boring unit, SH colony, Ukkadam. Now at 17, Muniappa nagar, LIC colony, Telungupalayam, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது /, பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12.9.2025

12/09/25

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 12.09.2025.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ... T. Prabudass,
Rank: நிலை Inspector of Police, No. எண் .....
VCHC, Coimbatore.

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

Contents of FIR in Cr.No.19/2025/AC/CB, U/s. 7, 12 r/w 7 of Prevention of Corruption act 1988 as amended by the prevention of Corruption (Amendment) Act 2018

இன்று 12.09.2024 காலை சுமார் 11.00 மணியளவில் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் ஜீ.பிரபுதாஸ் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.S.பாபு, துணை ஆட்சியர் /ஆய்வுக்குழு அலுவலர்,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.19/2025/AC/CB U/s. 7, 12 r/w 7 of PC act 1988 as amended by the prevention of Corruption act (Amendment) Act 2018 ஆக 11.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் S.பாபு, துணை ஆட்சியர் /ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.280/2025/ஐ1 நாள் 12.09.2025 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - சார்பதிவாளர் அலுவலகம், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்துவரும் திரு.R.ரகோத்தமன் மற்றும் இணை சார்பதிவாளராக(பொறுப்பு) பணிபுரிந்துவரும் திருமதி.R.ஜெஸிந்தா ஆகிய இருவரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும் பத்திர எழுத்தர்களிடமிருந்தும், இந்த அலுவலகத்தில் தகவல் தொழில் நுட்ப பணியாளராக (Data Entry Operator) பணிபுரியும் திரு.S.ரவிச்சந்திரன் என்பவர் மூலமாக லஞ்சமாக பணம் பெற்று அப்பணத்தை அவர் அருகில் இருக்கும் மர பீரோவில் வைத்து தினமும் வீட்டுக்கு செல்லும்போது இரண்டு சார்பதிவாளர்களுக்கும் கொடுத்து விடுவதாக கிடைத்த நம்பகத் தகுந்த தகவல் கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் நான், கோவை ஊ.த.க.ஆய்வாளர் திரு.பிரபுதாஸ் மற்றும் காவல் குழுவினருடன் 11.09.2025-ம் தேதி மதியம் சுமார் 13.45 மணிக்கு மேற்படி அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த சார்பதிவாளர், திரு.R.ரகோத்தமன் மற்றும் தற்காலிக இணை சார்பதிவாளர்(பொறுப்பு) திருமதி. R.ஜெஸிந்தா மற்றும் சார்பதிவாளர் அலுவலக பணியார்களிடம் என்னையும், ஊ.த.க. காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு திடீர் தணிக்கைக்கு வந்த விபரம் தெரிவிக்கப்பட்டு அலுவலகத்தை சோதனை செய்தோம். அலுவலகத்தில் நுழைந்தவுடன் வலது புறத்தில் முத்திரை வைத்து கொண்டிருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் திரு.S.ரவிச்சந்திரன் என்றும், அவர் தொழில் நுட்ப

பணியாளர்(Data Entry Opertor) ஆக கடந்த 02.01.2025 ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், அலுவலக உதவியாளர் இல்லாததால் தான் தற்போது பத்திரத்தில் முத்திரை போட்டு கொடுக்கும் பணியை செய்து வருவதாகவும் தெரிவித்தார், அவர் அருகில் கிழக்கு புறத்தில் 6-அடி உயரம் கொண்ட மர பீரோவில் அவர் வைத்திருக்கும் அலுவலக ஸ்டேம் பேடுகள், முத்திரைகள் மற்றும் ரேகை பதிவேடுகள் ஆகியவற்றை வைத்து பராமரித்து வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்து அவர் ஆஜர் செய்த பணத்தை பார்த்ததில் அதில் ரூ.4,900/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரை விசாரித்தபோது அவர் காலையில் ரூ.500/- கொண்டு வந்ததாகவும், அதனை அலுவலகத்தில் பராமரித்து வந்த தொழில் நுட்ப கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். கையிருப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் ரூ.500/-ஐ மட்டும் பதிவு செய்து வைத்திருந்ததால் ரூ.500/- மட்டும் சரியாக இருந்ததால் அவர் சொந்தபணம் ரூ.500/-யை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது, மீதி ரூ.4,400/-க்கு அவர் சரியான முகாந்திரம் சொல்லாததால், இது ஆவண எழுத்தர்கள் மற்றும் பொதுமக்களால் கொடுக்கப்பட்ட லஞ்சப்பணமாக இருக்க கூடுமென கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவர் முத்திரை போடும் டேபிளை காவல் குழுவினருடன், இரண்டு சார்பதிவாளர்கள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டும், முத்திரை டேபிளை ஒட்டி இருந்த மர பீரோவை சோதனை செய்ததில் அதில் இருந்த பழைய பதிவேடுகள் மற்றும் ஆவணங்களுக்கு இடையில் இருந்து 3-காக்கி கவரில் பணம் கத்தையாக காணப்பட்டது அதனை எடுத்து எண்ணிப்பார்கையில் முறையே ரூ.50,000/-, ரூ.50,000/- மற்றும் ரூ.27,000/- ஆகமொத்தம் ரூ.1,27,000/-பணம் இருந்தது. அதனை பற்றி திரு.ரவிச்சந்திரன், தொழில் நுட்ப பணியாளர், திரு.ஆர்.ரகோத்தமன், சார்பதிவாளர் மற்றும் திருமதி.ஜெஸிந்தா, தற்காலிக இணை சார்பதிவாளர் (பொறுப்பு) ஆகியோரை விசாரித்ததில் தங்களுக்கு மேற்படி பணம் பற்றி எந்த விபரமும் தெரியாது என்றும், அந்த பணம் எங்களது பணம் இல்லையென்றும், பணம் எப்படி வந்தது என்று தெரியாது என்றும் தெரிவித்தார்கள். எனவே மேற்படி மொத்த தொகை ரூ.1,27,000/-யை மேற்படி இரண்டு சார்பதிவாளர்கள் திரு.ரகோத்தமன் மற்றும் திருமதி.ஜெஸிந்தா ஆகியோர்களுக்கு ஆவணம் பதிவு செய்து கொடுக்க பொதுமக்கள் மற்றும் ஆவண எழுத்தர்களிடமிருந்து, தொழில் நுட்ப பணியாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் லஞ்சமாக வசூல் செய்து, அவரது அருகில் இருந்த மர பீரோவில் வைக்கப்பட்டிருந்த தொகை என்று கருதி மேற்கண்ட பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இரண்டு சார்பதிவாளர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் அலுவலக வளாகத்தில் கையில் சோல்டர் பேக்குடன் சந்தேகத்திற்கு உரிய நிலையில் நின்று கொண்டிருந்த நபர் ஒருவரை அழைத்து விசாரித்ததில், அவர் பெயர் திரு.S.ரமேஷ் என்றும் த/பெ.சுந்தர்ராஜ், கதவு எண்.17, முனியப்பா நகர், LIC காலனி, தெலுங்குபாளையம், கோவை என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் நண்பர் திரு.மனோஜ், வழக்கறிஞர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவ்வப்போது பத்திர பதிவுக்கு வரும் பொதுமக்களிடம், பத்திரம் தயார் செய்து பத்திர

பதிவு அலுவலகத்திற்கு வந்து பத்திரம் பதிவுக்கு உதவியாக வந்து செல்வது வழக்கம் என்றும், அவ்வாறு சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இன்று சுமார் 02.00 மணிக்கு 3-கிரைய பத்திரத்துடன் கிரையம் செய்யவேண்டி வந்ததாகவும் தெரிவித்தார். அப்போது அவர் வைத்திருந்த சோல்டர் பேக்கை சோதனை செய்ததில் அதில் அசல் பத்திரம் இருந்தது. அதைபற்றி அவரை விசாரித்தபோது அவரது வழக்கறிஞர் பத்திர பதிவிற்காக மேற்படி பத்திரத்துடன் அனுப்பிவைத்ததாகவும் கூறினார். மேலும் அவருடைய சோல்டர் பேக்கை சோதனை செய்ததில் அதில் மூன்று தனித்தனிக் கவரில் கத்தையாக பணம் காணப்பட்டது. அதனை பிரித்து கணக்கிட்டு பார்த்ததில் ஒன்றில் ஜான் மற்றும் ரூ.20,000/- என்று எழுதப்பட்ட ப்ரவுன் கவரில் ரூ.20,000/- காணப்பட்டது. பல தொகைகள் எழுதப்பட்ட மற்றொரு வெள்ளை கவரை பிரித்து கணக்கிட்டு பார்த்ததில் ரூ.11,700/- காணப்பட்டது. V.Star முதல் வெற்றி என்று குறிப்பிப்பட்ட வெள்ளை கவரில் ரூ.30,000/- காணப்பட்டது. மேற்குறிப்பிட்ட பணம் பற்றி விசாரிக்க சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு, தனது நண்பர் திரு.விக்னேஷ் என்பவருடைய வீட்டை விற்றுகொடுத்த வகையில் தனக்கு கிடைத்த ஊக்கத்தொகை என்றும், தனது நண்பர் ஜான் என்பவர் என்னிடம் நகை வாங்குவதற்காக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக கொடுத்த வைத்த பணம் என்றும் கூறினார். அந்த பணம் அவ்வப்போது சேமிப்பில் சேர்த்து வைத்த பணம் என்றும் கூறினார், இவ்வாறாக மேற்படி பணம் பற்றி முன்னுக்கு பின் முரனாக பதிலளித்தாதால் மேற்படி மொத்த தொகை ரூ.61,700/-யை சார்பதிவாளர்கள் திரு.ரகோத்தமன் மற்றும் திருமதி.ஜெஸிந்தா ஆகியோர்களுக்கு ஆவணம் பதிவு செய்து கொடுக்க லஞ்சமாக கொண்டு வந்ததாக கருதி மேற்கண்ட பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி 3-கிரைய பத்திரத்தை நகல் எடுத்து அதில் திரு.ரமேஷ், காவல் ஆய்வாளர், இரண்டு சார்பதிவாளர் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர் ஆகியோரிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக பணியாளர்களின் இருக்கையை சோதனை செய்து அவர்களிடம் இருந்த பணம் சம்பந்தமாக விசாரித்து சொந்த பணம் அவர்களிடம் திருப்பி வழங்கப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் இருந்த திருமதி.ஜெனிபர், த/பெ.மாணிக்கம், க.எண்.MP430, கணபதி மாநகர், கணபதி போஸ்ட், கோயம்புத்தூர், அவர்களை விசாரிக்க அவர் பரிமளா முரளிகிருஷ்ணன், வெள்ளலூர் ஆவண எழுத்தர் அவர்களிடம் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், இணை சார்பதிவாளர் (பொறுப்பு) திருமதி.ஜெஸிந்தா அவர்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு இன்றைக்கு அதிகமாக இருப்பதால் பத்திரத்தில் ஆவண எண் எழுதுவதற்கு வரசொன்னதின்பேரில் இன்று இந்த அலுவலகத்திற்கு வந்து வேலை செய்துகொண்டிருந்ததாகவும், இதுபோல் சராசரியாக வாரத்திற்கு ஒரு நாள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து வேலை செய்து கொடுப்பதாகவும் கூறினார். மேலும் திடீர் தணிக்கை நடவடிக்கையின் போது பணியாளர் ரொக்க கையிருப்புபதிவேடு தேதி.11.09.2025-ன் நகல், செப்டம்பர் 2025 மாதத்திற்கான பணியாளர்களின் வருகைபதிவேட்டின் நகல், தகவல் தொழில்நுட்ப ரொக்க கையிருப்பு பதிவேடு நாள்.09.09.2025, 10.9.2025, 11.09.2025-ன் நகல், ரொக்க பதிவேடு

நாள்.09.09.2025 , 10.9.2025, 11.09.2025-ன் நகல், Copy of Transfer and posting order of Tr.Thangapandijaganathan, IPCO செப்டம்பர் 2025 மாதத்திற்கான Data Entry Operator -களின் வருகைபதிவேட்டின் நகல், Print out of Account A Singanallur, Print out of Sub Division Account Singanallur (date from 11.09.2025), Print out of Account HSinganallur date from 11.09.2025, Print out of Account D Singanallur, Print out of Account B Singanallur , Print out of Account C Singanallur (date from 11.09.2025), Print out of Register of Fees for Searches and copies under the society Registration act 1975, Print out of Account DW Singanallur, Print out of Birth/Death Cash Account Copy of Sale Deed in T.P.No.232313819 dated.11.09.2025, Copy of Sale Deed in T.P.No.232562461 dated.11.09.2025, Copy of Sale Deed in T.P.No.232565864 dated.11.09.2025, ஆகியவைற்றை சார்பதிவாளர் திரு.ரகோத்தமன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கை விபரம் குறித்து ஒரு நடவடிக்கையை 11.09.2025-ம் தேதி 16.00 மணி முதல் 20.00 மணி வரை தயார் செய்து அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் தணிக்கையின் போது கைபற்றபட்ட பணம் ரூ.1,93,100/- மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் சம்பந்தமாக புலன்விசாரணை செய்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். துணை ஆட்சியர் /ஆய்வுக்குழு அலுவலர் மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், கோயமுத்தூர். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,93,100/-, 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் (1.திரு.ரகோத்தமன், சார்பதிவாளர், 2.திருமதி.ஜெஸிந்தா, மற்றும் 3.திரு.ரவிச்சந்திரன்) 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். Sir, Received the complaint on 12.09.2025 at about 11.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.19/2025/AC/CB U/s. 7, 12 r/w 7 of Prevention of Corruption act 1988 as amended by the prevention of Corruption (Amendment) Act 2018 (Sdxxxxxx) J.Prabudass, Inspecor of Police, V&AC, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,93,100/- ஆகியவைகளை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

(ஜீ.பிரபுதாஸ்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.